# புனித ஜூலியஸ் (-352)

உரோமையில் பிறந்த இவர் 337ல் பாப்புவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் காலத்தில் திருச்சபைக்கு சங்கடங்கள் ஏராளமாக வந்தன. ஆரிய பதிதர்கள் ஓயாது தொல்லை கொடுத்து வந்தார்கள். அலெக்சாந்திரியா நகர் ஆயரான புனித அத்தனாசியுஸ் என்பவரை நெடுங்காலமாக துன்புறுத்தி அவர் மீது பழிசுமத்தினார். அத்தனாசியுஸ் குற்றமற்றவர் என்று உரோமையில் கூடிய சங்கம் தீர்ப்புக் கூறியது. கிழக்கிழந்திய நாடுகளில் இருந்த புதித ஆயர்களுக்கு பாப்பு ஒரு கடிதம் அனுப்பினார். “அப்போஸ்தலர் காலத்திலிருந்தே உரோமைப் பேராயர் அனைத்திலும் கலந்து ஆலோசிக்கப்பட்டு வந்திருந்தார். கிழக்கத்திய ஆயர்களும் இந்த உரிமைகளை அங்கீகரித்திருக்கிறார்கள் என்றாலும் நாளடைவில் தங்கள் நடத்தையால் இந்த உரிமைய அவமதித்திருக்கிறார்கள்” என்று பாப்பு கடிதத்தில் எழுதி இருந்தார்.

சிந்தனை:

அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே உலகின் சகல ஆயர்களும் பாப்பானவரை கலந்து ஆலோசித்து வந்திருக்கிறார்கள். இது சரித்திர வாயிலாய் நாம் அறிந்த உண்மை. இதை இக்காலத்தில் சில ஆயர்கள் சட்டை பண்ணுவதில்லை. இவர்களுக்கு நல்ல மனதைக் கொடுக்கும்படி பரிசுத்த ஆவியை மன்றாடுவோம்.

செபம்:

ஆண்டவரே, திருச்சபையின் தலைவர்களுக்கு தாழ்ச்சியையும் கீழ்ப்படிதலையும் தாரும்.